# பஸ்ஸற பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 11 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 செப்தெம்பர் 04 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூலை 01 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பஸ்ஸற பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 4,089,880 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,027,861 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,732,256 ஆக இருந்தது.

சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற கைத்தொழில்கள், வியாபாரங்கள் போன்றவைகளை மெய்மையாய்வின் மூலம் இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 3,648,612 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,898,000 |

### 2.2.5 கடை வாடகை

பஸ்ஸர பொதுச் சந்தை கடைகள் தொடர்பாக மாகாண மதிப்பீட்டாளரினால் 2005 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை அறவீடுகள் புதிய நிர்மாணங்களின் பின்னர் அமுல்படுத்துவதற்காக 2006 ஆம் ஆண்டின் போது சபை தீர்மானமொன்றை எடுத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பழைய மதிப்பீட்டு வாடகையில் வாடகை அறவிடப்படுகின்றமையினால் சபைக்கு அறவிடவேண்டியிருந்த கணிசமான வரிமானங்கள் இழக்கப்பட்டிருந்தன.

### 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

(அ) 1995 ஆம் ஆண்டின் போது இராணுவத்தின் அவசர கடமைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டு 2009 ஆம் ஆண்டின் போது திரும்பவும் சபைக்குக் கையளிக்கப்பட்ட கப் வாகனம் உடைந்த நிலையில் சபையின் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) தண்ணீர் பவுசர் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்பாடற்று சபையின் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கழிவப் பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான செயல்நடைமுறையொன்று அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய மீதும்பிட்டியவில் அமைந்துள்ள காணியில் முறையற்ற வகையில் போடப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிருவாகம்